மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை ஒன்றியம் நீடூரில் முஸ்லிம் ஜமாத் மற்றும் கழகத்தின் சார்பில்இந்தியத் தேர்தல் ஆணையத்தால் கொண்டு வந்துள்ள சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (எஸ்.ஐ.ஆர்.) படிவங்களை முஸ்லிம் ஜமாத்தார்கள் மற்றும் கழகத்தினர் வாக்காளர்களுக்கு பூர்த்தி செய்து தரப்படும் பணிகளை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் நேரில் பார்வையிட்டார். உடன் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், ஒன்றிய கழக செயலாளர்கள் ஞான இமயநாதன், ப.முருகமணி, என்.இளையபெருமாள் மற்றும் பலர் உள்ளனர்.

பண்ருட்டி நகர தி.மு.க. சார்பில் நகர செயற்குழு கூட்டம் ,நகர கழக அலுவலகத்தில் நகர மன்ற தலைவர், நகர கழக செயலாளர் க. இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் தணிகை செல்வம், ஆனந்தி சரவணன், நகர நிர்வாகிகள் , ராஜா, ராமலிங்கம், கௌரி அன்பழகன், பிரபு, ராம்குமார், சங்கர், தொகுதி ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் நாராயணன், பாரி, லோகநாதன், நகர மன்ற உறுப்பினர்கள் ரமேஷ், சோழன், சாந்தி செந்தில், லாவண்யா முத்துவேல், , நகர இளைஞரணி அமைப்பாளர் சம்பத், மாணவரணி பார்த்திபன், பிரபு, ராஜா, ராஜ் முஹம்மது, எஸ்.பி.ராஜா, மோகன்மற்றும் கழக நிர்வாகிகள் BLA.2BDABLC நிர்வாகிகள் கலந்துக்கொண்டனர். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

வில்லியனூர் சிவ கணபதி நகரில்

ரூ.95 லட்சம் மதிப்பில் வடிகால் வாய்க்கால் அமைக்கும் பணி!

புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தொடங்கி வைத்தார்!

புதுச்சேரி, நவ. 21 - வில்லியனூர் சிவ கணபதி நகரில் ரூ. 95 லட்சம் செலவில் வடிகால் வாய்க்கால் அமைக்கும் பணியை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தொடங்கி வைத்தார்.

புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சிவ கணபதி நகரில் உள்ள சன்னதிக்கால் கிளை வாய்க்கால் மெயின் ரோட்டில் உள்ள விநாயகர் கோவில் அருகில் இருந்து விழுப்புரம் - புதுச்சேரி தேசிய நெடுஞ்சாலை வரை வடிகால் கட்டுமானப் பணிக்கு 94 லட்சத்து 83 ஆயிரத்து 639 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுப்பணித்துறை நீர்ப்பாசனக் கோட்டம் மூலம் மேற்கொள்ள ப்பட உள்ள பணிக்கான அடிக்கல் நாட்டு விழா சிவ கணபதி நகரில் நடைபெற்றது.

இதில் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா கலந்து கொண்டு, புதிய வடிகால் வாய்க்கால் அமைக்கும் பணியை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை நீர்ப்பாசனக் கோட்ட செயற்பொறியாளர் ராஜ்குமார், உதவிப் பொறியாளர் லூயிப்பிரகாசம், இளநிலைப் பொறியாளர் சிரஞ்சீவி, ஊர் முக்கியஸ்தர்கள் ஏழுமலை, சண்முகம், கண்ணன், வேதாச்சலம், தங்கராசு, சதாசிவம், சம்பங்கி, பாபு, ஏழுமலை , முருகையன், சிவமணி, கிருஷ்ண மூர்த்தி, குரு, குமார், கதிர், விஸ்வநாதன், இளங்கோ, தன்ராஜ், தனகோடி, சுப்ரமணி, யுவராஜ், ஜாபர், வெங்கடேசன், திமுக தொகுதி செயலாளர் மணிகண்டன்,

பொதுக்குழு உறுப்பினர் ராமசாமி, அவைத் தலைவர் ஜலால், இலக்கிய அணி அமைப்பாளர் சீனு மோகன்தாசு, வர்த்தக அணி அமைப்பாளர் ரமணன், துணை அமைப்பாளர்கள் சரவணன், ராமதாஸ், கோபி, தேசிங்கன், காசிநாதன், தொகுதி துணை செயலாளர்கள் ஜெகன்மோகன், அரிகிருஷ்ணன், தொகுதி செயற்குழு உறுப்பினர் சுப்பிரமணியன், கிளைக் கழக நிர்வாகிகள் ராஜி, ஜனா, மிலிட்டரி முருகன், சரவணன், ரவி, கார்த்திகேயன், முத்து, கோவிந்தராஜ், ரகு, கோதண்டம், சிலம்பரசன், விந்தியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

போடி நாயக்கனூர் நகராட்சி

19வது பகுதியில் மரக்கன்று நடும் விழா!

எஸ்.வெங்கடேஷ்குமார் எம்.சி. பங்கேற்பு!

தேனி, நவ. 21 - தேனி மாவட்டம்போடிநாயக்கனூர் நகராட்சியில் 19வது வார்டுதி.மு.க உறுப்பினரான எஸ்.வெங்கடேசன் தனது வார்டு பகுதியில் 100 மரக்கன்றுகள் நட்டு, பல்வேறு சாதனைகளை திராவிட மாடல் ஆட்சியில் செய்து பொது மக்களின் நல் மதிப்பையும் பாராட்டுகளையும் பெற்றுள்ளார்.

19 வது பகுதி நகர்மன்ற உறுப்பினராக பதவி ஏற்ற நாளிலிருந்து மக்களுக்கான சேவையை தொடர்ந்து செய்து வருகிறார்.

கலைஞர் நூற்றாண்டு விழா வில் தனது பகுதி முழுவதும் 100 மரக்கன்றுகள் நடப்பட்டு தற்போது பசுமை நிறைந்த பகுதியாக காட்சி அளிக்கிறது.

பட்டியலின மக்களுக்காக தனது சொந்தச் செலவில் சமுதாயக்கூடம் கட்டிக் கொடுத்து தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன் அவர்களால் திறந்து வைத்து சமூக நீதியை நிலைநாட்டி வருகிறார்.

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் அவரது சொந்த பணத்தில் திராவிட மாடல் அரசின் பங்களிப்புடன் சபரிமலை தெரு மற்றும் ஒழுகால்பாதை 2 வது தெருவில் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய மேல் நிலை நீர் திறக்க தொட்டி அமைத்து தெரு முழுவதும் தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

ஒழுகால் பாதை 2 வது தெருவில் புதிய மழைநீர் வடிகால் மற்றும் புதிய பாலம் கட்டி கொடுத்துள்ளார்.

சுதேசி நகரில் புதிய மழைநீர் வடிகால் வசதி ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

ஒழுகால் பாதை 3 வது தெருவில் புதிய மழைநீர் வடிகால் வசதி ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

அனைத்து தெருக்களிலும் தனது சொந்தச் செலவில் தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். சபரிமலை தெருவில் தனது சொந்தச் செலவில் புதிய மின்கம்பத்துடன் கூடிய தெரு விளக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

பாதாள சாக்கடை இணைப்பு இல்லாத வீடுகளுக்கு தனது சொந்தச் செலவில் இணைப்பு ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் இப்படி எண்ணற்ற மக்கள் சேவைகள் தொடர்ந்து செய்து மக்களிடம் பெரும் நன்மதிப்பினையும் பாராட்டுதலையும்பெற்றுள்ளார்.

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வாக்காளர் சிறப்பு திருத்தம் (SIR) நடைபெற்றுவருதை சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி தொகுதி பார்வையாளர் மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் வேலூர் ஜி.ரமேஷ் உடன் நேரடியாகச் சென்று கள ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்ச்சியில் நகர செயலாளர்.சு.இராசேந்திரன், வார்டு பிரதிநிதிகள், நிர்வாகிகள், BLA2, BLO ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட முன்னாள் செயலாளர் -

முன்னாள் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் 13 ஆம் ஆண்டு நினைவு நாள்!

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. அறிக்கை!

சேலம், நவ. 21 - ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட முன்னாள் செயலாளர் - முன்னாள் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களின் 13 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வருகிற 23 ஆம் தேதி அவரது நினை விடத்தில் மலரஞ்சலி செலத்தப்படுகிறது என்று சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து எஸ்.ஆர். சிவலிங்கம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளரும், முன்னாள் வேளாண்துறை அமைச்சரும், 'சேலத்தின் சிற்பி' என முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களாலும் சேலத்து சிங்கம் என அன்புடன் மக்களாலும் தோழர்களாலும் போற்றப்பட்டவருமான திருமிகு. வீரபாண்டியார் அவர்களின் 13ம் ஆண்டு நினைவு நாள் வருகின்ற 23.11.2025 ஞாயிற்றுகிழமை அனுசரிக்கப்படுகிறது.

அதனையொட்டி அன்று காலை 8 மணி அளவில் பூலாவரி கிளைக்கழக அலுவலகத்திலிருந்து எனது தலைமையில் மவுன ஊர்வலம் புறப்பட்டு அண்ணாரின் நினைவிடத்தை அடைந்து அங்கே மலரஞ்சலி செலுத்தப்படும். இந்நேரத்தில் திரு.வீர பாண்டியார் இறப்பதற்கு 9 ஆண்டுகளுக்கு முன்னாள் அவர் இறந்த அதே நவம்பர் 23ல் கழகத் தலைவர் கலைஞர் அவர்களையும் ஆருயிர் தளபதியார் அவர்களையும், பல இலட்சம் தொண்டர்களையும் மீளாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு மறைந்த, தலைவர் கலைஞர் அவர்களின் மனசாட்சி முரசொலியார் அவர்களின்திருவுருப்படத்திற்கும் பூலாவரி அலுவலகத்தில் அஞ்சலி செலுத்தப்படும். இந்நிகழ்வில் கழகத்தின் நிர்வாகி களும், தொண்டர்களும், மறைந்த தலைவர்கள் மீது பற்றும், பாசமும் கொண்ட பொது மக்களும் திரளாகப் பங்கேற்று பெருமை சேர்த்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

மும்பை கலைஞர் தமிழ்ச் சங்கம் 5 ஆம் ஆண்டுவிழா!

மும்பை, நவ. 21 - எழுத்தாளர் அன்னகொடி எழுதிய "கரும்புகை" "கூவத்தின் சுவாசம்" "கைநாட்டுக்காரன்" ஆகிய மூன்று நூல்கள் மும்பை கலைஞர் தமிழ்ச் சங்கம் நிறுவனர்/மும்பை திமுக பொறுப்புக்குழு உறுப்பினர் ம.சேசுராசு தலைமையில் வெளியிடப்படுகிறது

மும்பை கலைஞர் தமிழ்ச் சங்கம் ஐந்தாம் ஆண்டுவிழா 23.11.2025 ஞாயிறு மாலை 6மணிக்கு மும்பை தாராவி பகுதியில் அமைந்துள்ள சாவித்திரிபாய் புலே அரங்கத்தில் அரசு வழக்கறிஞர், விருதுநகர் தெற்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர், எழுத்தாளர் சி.அன்னக்கொடி எழுதிய கரும்புகை, கூவத்தின் சுவாசம், கைநாட்டுக்காரன் ஆகிய மூன்று நாட்கள் மும்பை கலைஞர் தமிழ்ச் சங்கம் நிறுவனர் தலைவரும் மும்பை தி.மு.க. பொறுப்புக்குழுத் தலைவருமான ம.சேசுராசு தலைமையில் வெளியிடப் படுகிறது.

மும்பை திமுக பொறுப்புக்குழு உறுப்பினர் மாறன் ஆரியசங்காரன் வரவேற்புரையாற்றுகிறார்.

முதல் நூலான "கரும்புகை"நூலை பம்பாய் திருவள்ளுவர் மன்றம் மற்றும் கலைஞர் தமிழ்ச் சங்கம் செயலாளருமான ஜேம்ஸ் தேவதாசன் வெளியிட தமிழ் காப்போம் அமைப்பாளர் கவிஞர் இறை ச. இராசேந்திரன் பெற்றுக் கொள்கிறார் .

இரண்டாவது நூலான "கூவத்தின் சுவாசம்" நூலை திராவிடவியல் மறுமலர்ச்சி நடுவம் நிறுவுனர் இரவிக்குமார் ஸ்ரீஃபன் வெளியிட மராத்திய மாநிலம் எழுத்தாளர் மன்ற துணைத் தலைவர் கவிஞர் இரஜகை நிலவன் பெற்றுக் கொள்கிறார்

மூன்றாவது நூலான "கைநாட்டுக் காரன்" நூலை கலைஞர் தமிழ்ச் சங்கம் புரவலரும் மும்பை திமுக பொறுப்புக்குழு உறுப்பினருமான ஓய்வு பெற்ற மத்திய அரசு அதிகாரி அன்பழகன் பொற்கோ வெளியிட மும்பை இலக்கிய கூடம் ஒருங்கிணைப்பாளர் கவிஞர் வ.ரா தமிழ்நேசன் பெற்றுக் கொள்கிறார்

இவ்விழா அரங்கில் மும்பை திராவிடர் கழக தலைவர் பெ.கணேசன், மராத்திய மாநில விசிக அமைப்பாளர் எஸ்.சாலமோன் ராஜா,மும்பை கலைஞர் தமிழ்ச் சங்கம் பொருளாளர் க.மு. மாணிக்கம், மும்பை பகுத்தறிவாளர் கழக தலைவர் அ.இரவிச்சந்திரன்,திமுக மகளீர் அணி திருமதி சுகுணா அன்பழன்,கலைஞர் தமிழ்ச் சங்கம் நிர்வாகக்குழு உறுப்பினர் ஆ. பாலசுப்பிர மணியன், தென்னிந்திய ஆதி திராவிட மாகாஜன பொருளாளர் இ.கே.சி சேகர்,மலபார்குன்று பகுதி திமுக செயலாளர் சேரை ச.பிரகாஸ்,கலைஞர் தமிழ்ச் சங்கம் நிர்வாகக் குழு உறுப்பினர் வளர்மதி பொற்கோ, கலைஞர் தமிழ்ச் சங்கம் நிர்வா கக்குழு உறுப்பினர் ஜாகிர் உசேன்,கலைஞர் தமிழ்ச் சங்கம் நிர்வா கக்குழு உறுப்பினர் இரா.மதியழகன், பாந்திரா திமுக பொன்.சுப்பிரமணியன் ஆகியோர் விழா அரங்கில் நூல்களை பெற்றுக் கொள்கிறார்கள்.

சிறப்பு அழைப்பாளர்களாக தென்னிந்திய ஆதிதிராவிட மகாஜன சங்க செயலாளர் மாறன் நாயகம்,முக்குலத்தோர் மகாஜன முன்னாள் தலைவர் பட்டன் தேவர்,மும்பை காங்கிரஸ் செயலாளர் கோபாலகிருஸ்ணன், தாராவி தி.மு.க. முன்னாள் செயலாளர் என்.வி.சண்முகராசன்,சிவசேனா உத்தவ் பாலாசாகிப் டாக்கரே கட்சி சாக்கா பிரமுக் முத்து பட்டன்,மலாடு தமிழர் நலச்சங்கம் தலைவர் லெ.பாஸ்கரன், திருவள்ளுவர் நற்பணி மன்றம் தலைலவர் ந.இராதா கிருஸ்ணன்,மனித நேயம் அமைப்பாளர் சங்கர் திராவிட், தமிழ் ஓட்டுநர் சங்க தலைவர் இரா.ரவிரஜினி,பம்பாய் நாடார் சங்க தலைவர் பேலஸ் துரை,தென்னிந்திய ஆதிதிராவிட மகாஜன தலைவர் எஸ்.பி.ஆனந்த், இளஞ் சிறுத்தைகள் எழுச்சிபடை அமைப்பாளர் ஆர்.கே.வளவன், ஜெரிமெரி தமிழ்ச் சங்கம் தலைவர் இல.முருகன், இதயம் அறக்கட்டளை தலைவர் மகேந்திரன்,தமிழின இரயில்வே சங்கம் தலைவர் டி.அப்பாத்துரை, வழக்கறிஞர் முருகசீலன், விழித்தெழு இயக்க அமைப்பாளர் உ.பன்னீர் செல்வம்,தமிழ்நாடு மெர்கைன்டல் வங்கி தாராவி மேலாளர் கணேஸ் பாலாஜி, லோக்மனிய கவுசிங் சொசைட்டி தலைவர் கே.அந்தோணி,கொலாபா தமிழ்ச் சங்கம் தலைவர் வ.பன்னீர் செல்வம், மும்பை மகிழ்ச்சி மகளீர் பேரவை நிர்வாகிகள் வளர்மதி கணேசன்,வனிதா இளங்கோவன், வெண்ணிலா சுரேஸ்,சுமதி மதியழகன்,தமிழ் ஆர்வளர் ஓய்வு பெற்ற இரயில்வே கதிகாரிசு.சுதாகரன்,தானே தமிழ்ச் சங்கம் தலைவர் கி.தனுஸ்கோடி,திராவிடர் கழகத்தைச் சேர்ந்த ஜே. வில்சன், பெரியார் பாலா, இ.அந்தோணி, அ.கண்ணன், கலைஞர் தமிழ்ச் சங்கம் நிர்வா கக்குழு உறுப்பினர் காரை இரவீந்திரன் அப்துல்கலாம் பவுன்டேசன் நிறுவனர் ராஜேஸ், ரவி குணசீவன், சக்தி கனகராஜ் திமுக பகுதி செயலாளர்கள் ஓர்லி இரா.காந்தி, கொலாபா அப்துல் திவான் மைதீன், வக்கோலா சேலம் மா.சீனிவாசன், ஜவேரிபஜார் வே.இரவிச்சந்தி ரன், கோலிவாடா பி.இராமையா, தி.மு.க. முன்னாள் இளைஞரணி துணை அமைப்பாளர் பொய்சர் க.மூர்த்தி,

தமிழ் இசை பாடகர்கள் முகிலன் அருள்நாதன்,மல்லிகா கருணாநிதி, முருகேசன் முத்தையா,கென்னடி அந்தோணி தாராவி பகுதியைச் சேர்ந்த தே. ஸ்டீபன், களந்தை சண்முகவேலு, ஆர்டி ஓ.மா.ராசன், சி.பாண்டியன், கோவிந்தன், முனீஸ்வரன், காளிதாஸ், சேர்மன்துரை, போன்ற ஏராளமானோர் கலந்து கொண்டு சிற ப்பிக்கிறார்கள்.

கழக பணிமனை காப்பாளர் க.ராசன் நன்றியுரையாற்றுகிறார்.

2024 டிசம்பர் 8ஆம் தேதி கலைஞர் நூற்றாண்டு நிறைவுவிழா மும்பையில் கலைஞர் தமிழ்ச் சங்கம் சார்பில் மிகவும் பிரமாண்டமாக கொண்டாடப்பட்டது இன் நிகழ்வில் தமிழ் நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் மாண்புமிகு கேஆர்.பெரியகருப்பன் கலந்து கொண்டு கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பு மலரை வெளியிட்டார் மற்றும் அதேநாளில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் அவர்கள் தலைமையில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா கருத்தரங்கமும் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது

இராயபுரம் ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனையில் ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ. ஆய்வு!

சென்னை, நவ. 21 - கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில்,

இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள மிகவும் பழமை வாய்ந்த ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனையில் நடைபெறும் கட்டுமான பணிகளையும், மருத்துவமனையின் சுற்றுப்புற பகுதிகளில், மேலும் தேங்கும் மழை நீரை உடனடியாக அப்புறப்படுத்தும் முன்னேற்பாடுகள் குறித்தும் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி நேரில் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் மருத்துவர் கண்காணிப்பாளர் திருமதி. சாந்தி இளங்கோவன், R.M.O திருமதி. விஜய லட்சுமி, பேராசிரியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பொதுப்பணித் துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.